


ஓலை 105| ஓசை 228| சனவரி 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்

## பொருள்

பலரும் கேட்டு வெறுக்கப், பயனற்ற சொற்களைச் சொல்லுபவன், எல்லாராலும் இகழப்படுவான்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.**

# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## கெடுவது செய்யின் விடுவது கருமம்!

### நான்கடித் தரவு கொச்சகக் கலிப்பா

கார்முகிலும் மழைமழலைக் கனிந்தீயா வண்ணமாக
நேர்நின்று இடிமின்னல் நேர்த்தியாகக் கேடுசெய்தும்
பார்செழிக்கப் பொழிந்துமழைப் பணிவுடனே நலன்விளைக்கும்.
சீர்கொண்டு கெட்டவர்க்கும் சீரறமும் செய்திடுவோம்!

வள்ளலேழு பேர்வாழ்ந்த வளமனத்து நாட்டினிலே
கள்ளமனங் கொண்டறமும் களைந்தேதான் கெடுதலையும்
பள்ளத்தை நோக்கியோடும் நீரைப்போல் ஏழையர்க்கே
கொள்ளையராய்ப் பொருள்குவித்தோர் கொடுமை செய்தல் நயன்மையில்லை!




நூல்பலவும் கற்றறிந்தும் நூல்பலவும் வடித்தீந்தும்
நூல்கொண்டு பெருமளவில் நுண்ணறிவுப் பெற்றவரும்
பால்மடியைக் கொய்தெடுக்கும் பாங்காகக் கேடுசெய்தல்
நால்மறையை ஓதியுமே நற்பயனு மேதுமில்லை!

கெட்டழியும் கெட்டவர்கள் கெடுதலினைத் தொடர்கொலையாய்
முட்டாள்கள் புரிந்தாலும் முழுநெஞ்சும் அறம்நிறைந்தோர்
கெட்டவர்க்கும் நல்வினையைக் கீழிறங்கி வந்துசெய்வர்;
கெட்டவர்கள் கெடுதலினைச் செயமறந்து திருந்தவேண்டும்!

தன்னலத்தின் போக்காலே தான்மட்டும் வாழவேண்டி
இன்னல்கள் விளைவித்தே ஏற்றசெல்வம் உடன்வாரா;
மன்னவனே என்றாலும் மனமுவந்து செய்தவினை
என்றென்றும் வதைத்திடுமே என்றெண்ணி அறம்செய்வோம்!




மழையைப்போல் நிலவைப்போல் வாழையைப்போல் கதிரைப்போல்
தழைத்தேதான் பிறர்வாழ தடம்மாறி தீவினையில்
பிழைத்திடாமல் கேடுகளை வேர்வரையில் கொன்றிடுவோம்;
விழைந்துகெடு வதுசெய்யின் விடுவதுவும் அறமாகும்!

**இலக்கணக் குறிப்பு:**

கலிப்பா வகைகளில் தரவுக் கொச்சகக் கலிப்பாவும் ஒன்று. இப்பாடல் ஒவ்வோரடியிலும் நான்கு நான்கு சீர்களாக அமையும். நான்கடிகள் முதல் எட்டடி வரை ஒரு பாட்டாக எழுதலாம். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரே எதுகை வரும். ஒவ்வொரு அடியின் முதல் சீரிலும் மூன்றாம் சீரிலும் மோனை அமையும். பெரும்பான்மையாக காய்ச்சீர்களாகவே வரும். முதல் சீர் நேரசையில் தொடங்கினாலும் ஒவ்வோரடியிலும் 2, 3, 4 ஆம் சீர்களைக் கலித்தளை கலித்தளை வரும்படி நிரையசையில் தொடங்க வேண்டும் மேலே இருக்கும் தரவுக் கொச்சகக் கலிப்பா நான்கடிக் கொண்டதால் நான்கடியும் ஓரெதுகை பெற்று வந்துள்ளன. அடிகளை உள்ளே தள்ளி எண்சீர் மண்டிலம் போல மடக்கி எழுதாமல் நேராகவே எழுதுதல் வேண்டும்.

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

# பணிவுடைமை

பஃறொடை வெண்பா

இன்சொல்லைப் பேசி
இயல்பாய் இருந்திட

அன்பை நிறைத்தே
அடக்கமாய் வாழ்ந்திட

அன்றைய வேலையை
அன்றே முடித்திட

கன்றும் மனதைக்
களிப்பாக்கி நின்றிட

என்றும் பிறரையே
ஏற்றிட எண்ணிட

கன்றெனத் துள்ளியேக்
காரியம் ஆற்றிட.

அன்மை அகற்றியே
அஞ்சாமல் நின்றிட

சன்னதம் கொள்ளாமல்
சான்றாய் இருந்தே

தன்மையாய் நாளுமே
தற்பம் அகற்றியே

நன்னயம் பேணியே
நன்றையே செய்திட

நன்னர் அடையவே
நன்னியே வாழ்ந்திடப்

பன்னியேச் செய்தல்
பணி.



கவிஞர் செ. கலைவாணி

# கண்டதை விரும்பாதே

பா வகை: கலித் துறை (ஐஞ்சீர் கொண்ட நெடிலடி)
(தேமா+தேமா+கூவிளம்+தேமா+ புளி மாங்காய்)

கண்ணில் காணும் காட்சிகள் கண்டே கலையாதே
மண்ணில் என்றும் மாண்புடன் வாழ மருளாதே
பண்பில் ஓங்கி பற்றதை விட்டே பயனாவாய்
எண்ணம் என்றும் நன்றதும் இருக்க எழிலாவாய்

காணும் எல்லாம் கைகளில் பற்றக் கருதாதே
தோணும் யாவும் தொல்லைகள் என்றே தொலைப்பாயே
பேணும் மெய்மை பேறுமே என்றும் பெறுவாயே
பூணும் நேர்மை பண்பதும் என்றும் பெரும்பேறே



கவிஞர் விஜயலக்ஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

# கற்றல்

வியாபிக்கும் சமுத்திரமான
கற்றல்களின் காலக் கரைசலில்
சத்தமிடும்
என் மௌனங்கள்
கை மண்ணளவாவது
எடுத்துக்கொள்ள
காத்திருக்கிறது
வீணாக்கிய
பொழுதுகளிடமும்
நுனிப்புல் மேய்ந்த
புத்தகங்களிடமும்
மீண்டும் சந்தித்து
உரையாடிய
பின்னான தருணத்தில்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# தலைக்கோதல்



மிதந்து வந்து
மெல்லத் தழுவிக்
கடந்து போகுமதை
வெறுமையென்று எப்படிக் கூறுவது

ஒன்றுமில்லாத ஒன்று அதுவல்ல
அது ஏதாகினும் ஒன்று
அது உயிர் பெற்ற ஒன்று
நகர்ந்து நர்த்தனமிடும் ஒன்று

சில சமயங்களில் எம்மை விட்டும்
தொலைந்து போன தூரமாகிய
பிரிந்து சென்ற ஒருவரின்
தலைக்கோதலாகவும்
இருக்கலாம் இல்லையா?

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# வாழ்க்கை

வாழ்ந்த வீட்டை
விட்டுப்பிரிய வேண்டிய
நிர்ப்பந்தநிலை.
வீட்டில்
அங்கொன்றும்
இங்கொன்றுமாய்
சிதறிக்கிடக்கும்
வாழ்வின்
கணங்களை
விட்டுப்பிரிய மறுக்கிறது
மனம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# உட்பகை

## அதிகாரம் : 89

நீரொடுநிழலை நுகருங்கால்
இன்பமேயாயினுமது நோய்செய்தால்.
தீமையாகுமாப்போல் சுற்றத்தியல்பும்
துன்பஞ்செய்யினது தீமையேயாம்.

வாள்போல்வெளிப்படும் பகைவர்க்கு
அஞ்சிடலினும் உறவாயிருந்தும்.
உள்ளத்துட் பகைகொண்ட
சுற்றத்தார்க்கே அஞ்சல்வேண்டும்.

உடனிருக்கும் உட்பகைஞர்க்கு
தன்னைக் காவாக்கால்.
மட்கலத்தை அறுக்குங்கருவிபோல்
தவறாமலவர் அழிவுதருவர்.

உள்ளத்திருக்கும் கொடும்பகையை
உடனே ஒழிக்காவிடிலஃது.
சுற்றமழிக்கும் குற்றங்களை
படைபோல் அள்ளித்தரும்.

புறத்துறவுமுறைத் தன்மையரோடு
உட்பகைத்தோன்றிடி னஃது.
ஒருவர்க்கு இறக்குமளவிலான
குற்றங்களைக் கொடுக்கும்.

உற்றாரிடத்தில் பகைதோன்றிடின்
அவ்வுட்பகை ஒருவனை.
அழிக்காதிருத்த லென்பது
எக்காலத்தும் அரிதாம்.

செம்பினிணைப்பாய் பொருந்திடினும்
உட்பகையுள்ள குடியிலுள்ளோர்.
அகத்தே பொருந்தியிருத்தல்
எக்காலமு மில்லையாம்.



**உட்பகை**

உட்பகையுண்டான குடியானது
அரத்திலறுக்கப்பட்ட இரும்பாய்.
வலிமைகுன்றி நாளுக்குநாள்
தேய்ந்தொழிந்து போகுமாம்.

உட்பகைகொண்டோன் பெருமை
எள்ளின்பிளவாய் சிறிதாயினும்.
நாட்பட்டகாலத்து அப்பெருமை
நிலையின்றி கெட்டழியுமாம்.


மனம் பொருந்தாரோடு
கூடி வாழ்தலென்பது.
குடிசையுள்ளே பாம்போடு
குடியிருக்கும் தன்மைக்கொப்பாம்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# சீவக சிந்தாமணி (பத்து)

(ஆசிரியர் : திருத்தக்க தேவர்)

## 2. கோவிந்தையார் இலம்பகம்




பசுக்களுக்கு நேர்ந்ததைக் களைய வழியில்லை
பகைவர்களைக் கொன்று மீட்பது எப்படி ?
வகை தெரியாமல் தலைவனிடம் சென்றனர்
இடையர்கள் துன்பம் நீங்கவழிஎன்ன ?

தலைவன் நந்தகோபன் மனம் கலங்கினான்
மலைமீது இருக்கும் வேடுவர்கள் வெல்வது எப்படி
விலை மதிப்ற்ற மகளை நினைத்தான்
கலைகள் பல கற்ற பேரழகி அவள்

நகரின் தெருக்களில் முரசு முழங்கியது
தகவல் அனுப்பினான் நந்தகோபன் ,மக்களுக்கு
"ஆக, கேளுங்கள் ஆனிரை மீட்பவர்க்கு,
சுகமான என் மகளை மணமுடிப்பேன்"

இடையர்கள் துயரத்தை அறிந்தான் சீவகன்
படைதிரட்டி ஒருவனாக போருக்குச் சென்றான் .
"விடை கொடு தாயே" மனதார வேண்டினான்
வேடுவர் படை சிதறி ஓடின

களவாடிய பசுக்கள் தம்தம் வீடு திரும்பின
களிப்பில் இடையர்கள் சீவகனைப் போற்றினர்
தளபதி சீவகன் என்றான் நந்தகோபன்
உள்ளபடி மகளுக்கு மணமுடிக்க எண்ணினான் .

ஐயனே ஒளிவிடும் மகள் கோவிந்தையை
தயை கூர்ந்து மணந்துகொள்ள வேண்டும்
கயல் போன்ற கண்களையுடைய மகள்
தயக்கமின்றி தங்களுக்காக காத்திருக்கிறாள்

நந்தகோபன் வேண்டுதலை ஏற்கவில்லை சீவகன்
இந்த நேரம் மணாளனாகும் தகுதியில்லை
விந்தையான உலகில் கடமைகள் ஏராளம்
சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதகமாக இல்லை

தங்கள் மகள் உன்னதமான குணவதி
உங்களுக்கு சம்மதம் என்றால் கூறுங்கள்
சிங்கம்போன்ற வீரன் என்னுயிர் நண்பன்
இங்கு நடந்த போரில் எனக்கு உதவியவன்

அவன் பெயர் பதுமுகன் உயிர்த்தோழன்
தவமிருந்தாலும் கிடைக்காத உத்தமன்
கவனமாக நிதானமாக செயலாற்றுவான்
அவனுக்கு தங்கள் மகளை மணமுடியுங்கள்

பதுமுகன் கோவிந்தையாரை மணந்தான் .
கோவிந்தையார் இலம்பகம் முற்றும்
ஆக மொத்த செய்யுட்கள் : 492 .
அடுத்து காந்தருவதத்தையார் இலம்பகம் .

தொடரும்...

கவிஞர் ந. திருக்குமரன்

"நெடு வாடை இளைப்பாற்ற
நீராடிகள் கொண்டாடும் நாள்.
உறுபகை வீழ்த்தி உற்றவர் உளம் மகிழ
உதயமாகும் திங்கள்.
இல்லாமை நீக்கி இனிமை நல்கும்
அறுவடைத் திருநாள்
கயமை ஒழித்து கனிவு தரும்
தமிழர் திருநாள்"



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# நான் இன்னும் மரணிக்கவில்லை

நான் பல தடவைகள் உடைக்கப்பட்டிருக்கிறேன்.
வேரோடு சாய்க்கப் பட்டிருக்கிறேன்.
தூக்கியெறியப் பட்டு
கண்ணீரோடு அமர்ந்திருக்கிறேன்
தவறிழைக்காமல் மண்டியிட்டு
அமர்த்தப்பட்டுள்ளேன்



ஆனாலும் நான் மரணிக்கவில்லை
இன்னும் சற்றேனும் மண்ணறை
வாசம் நுகரவில்லை
எத்தனையோ அன்புள்ளங்களின்
ஆசுவாசப்படுத்தல்களின் அரவணைப்பு
என்னை மீட்டெடுத்திருப்பதாக
உணர்வதால் மீண்டெழுகிறேன்

என்றாவது ஒருநாள்
நிச்சயம் இந்த ஓடம்
கரைசேருமென கனவுகள் பல
ஆழ் மனதில் புதைத்து
வைத்து தினம் தினம்
சலவை செய்கிறேன்
காயப்பட்ட உள்ளத்தை

கண்களினைத் துளியும் கசக்காமல்
கண்ணீர் வடிக்காமல்
உண்மையில் நான் ஒரு இரும்பு மனிதன்
என்று கூறி முடிக்கிறேன்.
ஆனாலும் என்னதான் செய்ய
கண்ணீர் தான் முற்றுப்புள்ளி வைக்கிறது.

முன் போல் நான்
இல்லை என்கிறீர்கள்
ஒரே பதில் தான்
புதைத்துவீட்டீர்கள்
ஆனாலும்
நான் இன்னும் மரணிக்கவில்லை.

கவிஞர் சுமையா சுதீதரர், நெல்லியகம (அனுராதபுரம்)

# எதை கேட்கிறது?

அந்த தீப்பறவை தான்
அடிக்கடி பின் தொடர்கிறது.
என் நிழலாகவே
மாறி விட்டதோ.

அவள் நினைவுகளின்
தாக்கத்தில்
மேலே பார்க்கும் போது
அவளை கபளீகரம் செய்து
தூக்கிச் செல்வது போல
பிரதி பலிப்புகள்.



எதற்காக
மின்னும் விண்மீனை
கண்ணுக்குள் வைத்துக் கொண்டு மேலும்
கீழும் இமைக்கிறது.
இறகின்
வண்ணங்களில் மயக்கப் பார்க்கிறதா?
இல்லை
எலிக் கூண்டாக
பொறி வைக்கும் எந்திரமா?

எதற்கும் பதறாமல்
உள்ளே இழுத்துக் கொண்டு
வான் வெளியில்
தனியாக விட்டு விடப் போகிறதா?

எதை கேட்கிறது?
புரியாத மொழியில்
சொல்லிக் கொண்டே
சிறு மழலையாய்
தூக்கிக் கொண்டு
அண்ட வெளியில் பறக்கிறது.

ஆ..ஆ...
நானும் ஆம்
நானும் பறக்கும்
பறவையாகிறேன்.
வெண்சிறகுகள் விரிகிறதே
தேவதை போல

கவிஞர் இராஜகை நிலவன், மும்பை

# கருக்கறுவா கையிலெடுத்து

கருக்கறுவா கையிலெடுத்து
கதிரறுக்கும் நேரத்திலே
ஒத்தாசையா வந்துபுட்டு
ஓரக்கண்ணால பாக்குறியே

வெடலப்புள்ள நேசத்துல
நெஞ்சுருகிப் போனேனே
பருவப்புள்ளப் பாசத்துல
பாசாங்கு ஏதுமில்லையே

ஆளான சின்னபொண்ணே
ஆசையத்தான் தூண்டுறியே
சேத்தணைக்கும் வேளையிலே
சேதாரந்தான் ஆயிடுமோ

பக்கத்துல நீவந்தா
வெலவெலத்துப் போறேனே
பாக்காமப் போகயில
பாழும்மனசு பரிதவிக்குதடி




கிட்டக்கத்தான் வாபுள்ள
கிண்டலாதான் பேசுபுள்ள
கஞ்சிகலயத்தில
கம்மஞ்சோறு கொண்டாடி புள்ள

வச்சகண்ணு மாறாம
என்னைதான் பாக்குறியே
குறுகுறுங்குது மனசுதான்
குத்தாட்டம் போடுதடி

வீச்சருவாப் பார்வையில
விழுந்துட்டேன் நானடி
மானாட்டம் துள்ளுறியே
மாராப்பும் குலுங்குதடி

வாலிபமும் சூடேறுதே
அத்தமக உன்னாலே
பரிசம் போட்டுதான்
கண்ணாலம் கட்டிக்கிறேன்.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# அன்புள்ள கணவனுக்கு

பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் கிடைத்த உறவே!
இதயம் துடிப்பதும் நிற்பதும் உன் முழங்களிலே உள்ளது.
எம்மை பிரிக்க உறவே கிடையாது
அன்பான கதை கூறிட ஆசை வார்த்தை அலை பாய்ந்திட

கொஞ்சிடவும் மிஞ்சிடவும் அள்ளிடவும் அணைத்திடவும்
முத்தமிட்டு சில்மிசம் பண்ணவும்.
உன்னை எதிர்ப்பார்க்கும் என் பெண்மையே!
நீயும் நானும் சரி பாதி வாழ்கிறோமே.

பணம் மட்டுமன்று வாழ்க்கை
மணம் இருந்தால் எல்லாமே சுவர்க்கமே.

அன்புள்ள மன்னவா!
நீ வாங்கி தந்த சேலையும்
அழைத்து சென்ற பாதையும்
சோலையாக மாறியதே உன் அன்பாலே.

உன்னில் உள்ள பல மாற்றம் என்னில் மெய் சிலிர்க்க செய்கிறதே
என்னையே சுற்றி சுற்றி வரும் நீ எனக்கு தவமிருந்தாலும்
கிடைக்காத வரமாக வந்து கிடைத்த பொக்கிஷம்.

அன்பான புருஷா! என் ஆணழகா!
இமைக்கும் நேரத்தில் பக்கம் வந்து செய்யும்
ஆசை தூண்டலும உன்னால் மட்டுமே.!
உத்தமனே! மகா ராசனே!

உன் அன்புக்கு நான் அடிமையல்லவா
பெண் படலத்தின் போது உன்னை எனக்கு பிடிக்கவில்லை
இருந்தும் கை கோர்த்து தலை குனிய செய்து என்னை உன்னவளாக்கினாய்.
அன்று பிடிக்காத உன்னை
இன்று மறக்க முடியாமல் செய்ததன் மாயாஜாலமென்ன.


உனக்கு முதல் நானே இவ்வுலகை விட்டு பிரிய வேண்டும்
உன் நினைவோடே போய் விட வேண்டும்
மீண்டும் ஒரு ஜென்மம் இருக்குமேயானால
நீயே என் கணவனாக அமைய வரம் கேட்பேனே!



கவிஞர் ஏ. எம். முர்ஷிதா பேகம், அக்குறணை, கண்டி

# வழக்கறிஞர்

கருப்பு வெள்ளை நிறத்துல காவியத் தலைவன்
வெளிச்சயமாய் காட்சி தரும் சமத்துவமே
எதிர்ப்புகள் இருந்தும் அச்சமில்லை நீதிக்காக
அச்சுறுத்தல் இருந்தும் அதிர்ந்ததில்லை
நீதி கேட்டு வீதியில் நின்றவர்களுக்கு தோள் கொடுத்தாய்
நீயே நித்தம் அலைந்து நீதி பெற்றாய்யே தோழா
என்றும் சமரசம் இல்லா சமத்துவனே



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரரா, சிதம்பரம்

# எழுதப்படாத கவிதைகள்

சன நெறுக்கடிக்குள்
அகப்பட்டு வெளிவர துடிப்பது போலவே

அடிப்படியில் நெருப்போடு போராடும் வேலையிலே
வெந்தனலில் வேகும்
உணவுப்பத நேரத்தில்

மின்னலாய் தோன்றி
மறைந்திடும் ஓர்கவியும்
பின்பு எழுத போகும்
வேலையிலே
மறந்தே போயிருக்கும்

தோட்டத்து மணலிலே
இயற்கை சுவாசத்தில்
காட்சிகளின் அழகில்
ஈர்த்த மனமும் லயிப்பில் இருக்க
சிந்தையில் முட்டும் கவியும் வேலை முடிந்து
எழுத நினைத்தலில் மறைந்து
மறந்து போயிருக்குமே

நினைத்த நொடியில்
அத்தனை அழகாக தோன்றும்
எழுத போகும் வேலை
அதுப்போல நன்றாக இருப்பதில்லையே ..

என்ன செய்வனோ எத்தனை முறையோ?
இப்படியே நகர்ந்து தானே போனதே!



கவிஞர் சுஹனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

# சுற்றம் போற்று

உற்றாரின் குற்றம் பல தறித்து,
ஏற்றுக் கொள்; பொறுத்து அவரை;
உள்ளத்துள் மாசு உள்ளபடியே அறுத்து


உற்றாருடன்
பொருந்துதலும் நன்றே; குற்றம்
முற்றும் அறுத்தவர் எவருளர்?குற்றம்
பார்க்க,சுற்றம் இல்லை ஆதலால்;

அவர் கரம் பற்றியே வாழ்
அவரைத் தம் பசி அறியும்
தாயெனக் கண்டு கொண்டு, தமதில்ல
கறவைப் பசுவென கொள்.



கவிஞர் சசிகலா விஸ்வநாதன், பெங்களூர்

# இயற்கை



கண்களை களவாடுது
பச்சை பசுஞ்சோலை!
தொடாமல் உறவாடுது
கார்மேக சேலை!

இயன்றவரை ரசிக்கிறது
மழை முகில் திங்கள்!
இயலாமல் தவிக்கிறது
அலை மோதும் கடல்!

உயிர் தந்த இறைவனின்
அழகை கூறும் சொல்லழகி!
மனிதனின் கரம் படாத
வெளிர் நீல பட்டழகி!

இயற்கையின் அழகு சிறையில்
என் மனமோ நிரந்தர கைதி!
கொஞ்சம் அடைபட்டால் தெரியும்
இறைவன் சொல்லும் செய்தி!

உறங்காத மழை முகிலே
உன்னோடு கை கோர்க்கவா!
இரங்காத மனித இனமே
என்னோடு இயற்கை காக்க வா!

உறங்காத மழை முகிலுடன்

கவிஞர் அனல்நிலவன், கொசவபட்டி, திண்டுக்கல்

# தமிழர் திருநாள் வாழ்த்துகள்

உழவரின் பெருமை
உணவின் மகிமை
உள்ளம் களிப்புறும்
உன்னத நாளும் வந்ததே.
*தை* எனும் பெயர் சூட்டி
கிழிந்த உள்ளங்களில்
மகிழ்வைத் தைத்திட வந்ததே.
மஞ்சளும் இஞ்சியில்
மண் மணந்திட
பச்சை வாசனையில்
வாழ்வின் சாதனை
இச்சை தூண்டியே
காப்பின் அரணாக
பானையில் இணைந்தே நின்றதே.
கரும்பின் சாறில்
புத்தரிசி சேர்ந்தே
குழைவாகி நல்விருந்தை தந்ததே.
வாழை இலையில்
நெய்மணம் கமழ்ந்திட
வாழ்க்கையும் இதுபோல இணைந்து
வாழ்ந்திட மணக்கும் என்றதே.
கதிரவனுக்கு ஒரு நன்றி
கதிருக்கு ஒரு நன்றி
காளைக்கு களையாய் நன்றி
நெல் விளைத்து சொல் களைந்து
நாட்டு மக்கள் யாவர்க்கும் சோறிடும்
உழவர்க்கு தலைதாழ்ந்த நன்றிகள் என்றதே.

அனைவருக்கும் தமிழர் திருநாள் வாழ்த்துக்கள்.



கவிஞர் சி. வித்யாகார்த்திக், பழநி

# பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

பொன் விளையும் இப்புவியிலே!
எங்களின் கதிரவனை வணங்கிடவே!
கழனியிலே நெற்மணிகள் பூத்து குளிங்கிடவே!
இல்லம்-உள்ளம் எங்கும் மகிழ்ச்சி பொங்கிடவே!
எத்திசையும் உழவனை போற்றிடவே!
எருதுகளையும் வணங்கி
இந்த நாள் - ஓர் விழாவாக கொண்டாடிவே!
வாழ்கின்ற நமது பெரியவர்களை கண்டு
வாழ்த்துக்கள் பல பெற்றிடவே வாழ்த்தும் உள்ளம்.



கவிஞர் மு. கவிபாலன் (எ) மு. சோமசுந்தரம்



அகர முதல

# ஓடும் ரயிலில்



தினம் நித்திரை மறந்து
நடுநிசி விழித்து எழுந்து
விழுந்து தொழுதோருக்கும்
தூங்கா இரவுகளில்
அழுது களைத்தோருக்கும்
சிலமணிநேர இலவசத் தாலாட்டு!

அதிகாலையில் தொழிலுக்காய்
ஓடிக்களைத்து ஏறிவந்தோருக்கு
ஒரு நீண்ட நிம்மதிப் பெருமூச்சு
நாளை மீண்டும் சந்திக்கலாம்
இனி சந்திக்காமலும் போகலாம்
தினமொரு தற்காலிக நட்புக்கள்!

அன்றாடப் பயணங்களுக்காய்
ஆங்காங்கே அத்தனை
ஆசனங்களையும் குத்தகைக்கு
எடுத்துக் கொண்டோரின்
வாழ்க்கைக் கோலங்களின்
தினமொரு குறுகிய மீட்டல்கள்!

நடந்து முடிந்த தேர்தலின்
மிச்சம் மீதிகளையும்
கடந்த காலங்களின் அநீதிகளினதும்
வெற்றி தோல்விகளினதும் ஆராய்வுகள்
ஒப்பீட்டு மீட்டல்களோடு
மனத்திருப்திக்காய் ஓர் அனலைஸில்!

பாடசாலை செல்லும் மாணவர்களின்
குழுப் பாடல்களும் கும்மாளமும்
சில்லறை நாணயங்களும்
பேனாக்களும் தான் தற்காலிக கஞ்சசட்கருவிகள்
கல்லூரி மானம் காக்கும் நோக்கில்
இலச்சினைகளோ பாக்கெட்டில்!

நின்று கொண்டே நிகழ்கால
அலசல்கள் அலப்பறைகள்
களைப்பு நீங்கும் சிறு உரையாடல்கள்
மடியில் படுத்துறங்கும்
சிறுவர்களின் அங்கலாய்ப்பப்புகள்
அவசர அவசரமாய் உணவு ஊட்டல்கள்
ஊட்டலோடு தொடரும் பாட மீட்டல்கள்!

அடுத்த தரிப்பில் இறங்குவதற்காய்
குட்டித்தூக்கத்தில் கனவு காண்போரை தன்
விழிப்பூட்டும் ஞாபகப்படுத்தல்கள்
மதம் தாண்டிய கலந்துரையாடல்கள்
தேச ஒற்றுமையில் ஓர் அழகுதான்!

கவிஞர் செண்பகச் சோலையாள் ஆய்ஷ், கம்பளை

எறும்புக்கு இறக்கை
ஈசல் பெயர் என மாற்றமாகின்றன
இறகினால் மரணம் .

வெள்ளாடுகள்
தாடியுடன் கம்பீரமாக நடக்கின்றன
உடலில்நாற்றம் வருவதில்லை



செம்மறி ஆடுகள்
பின்னால் வால் தாங்கியிருக்கும்
குனிந்தபடி நடக்கும்.

பனீர் சுவையானது
பொரித்தோ வறுத்தோ உண்ணலாம்
பால்சார் பொருளாகும் .

கவிஞர் இரா. சீ. பாலகுமார், சென்னை

# என்றும் உன் நீங்கா நினைவுடன்

ஏன் நீ கதைக்காமல் மௌனம்  நாடுகிறாயோ?
ஏன் நம் நினைவுடகளை தீயிட்டு கொளுத்துகிறாய்?
ஏன் இனிய பேச்சையும் மௌனமாக்கினாய்
ஏன் விட்டுப் பிரிகிறாய்?

உன் சிந்தையில் நானில்லையா?
என் சிந்தனை முழுதும் நீ அல்லவா
நான் சிந்தித்து உறவாடிருக்க வேண்டுமோ



இப்போது சிந்திக்க வைத்து விட்டாயே
பொய்யாக பழகி ஏமாற்றினாயே
உண்மை காதல் தோற்காதே
வற்றாத காதல் உன் மேல் வைத்தேன்
அதை பற்ற வைத்தாயே
கல்லாதவனுக்கும் புத்தியுண்டு
காதல் வசப்பட்டவனுக்கு  புத்தியில்லை

உன்னால் ஒரு முறை எனக்கு ஏமாற்றம்
அது எனக்கு பலமுறை ஞாபகம்
குப்பையில் இருந்தாலும் மங்கி இருக்க மாட்டேன்
உன் அன்பால் மங்கி விட்டேன்
உன் காதல் செவி வழி கேளாது இருந்திருதால்

என் விழி என்றோ மூடி இருப்பேன்
உன்னருகே இருக்க ஆசைப்பட்ட எனக்கு
தூரமாய் நீ செல்லலானாய்
நீ தந்த நினைவு என்றும் என்னில் வாழுமடா
உன் மேல் நான் கொண்ட காதல் உண்மையடா.
என் அன்பின்  உண்மை அறிவாய்
என் பக்கம் தேடி வருவாய்
என்றும் உன் நினைவுகளை சுமந்தவளாக காத்திருக்கிறேன்.

கவிஞர் அஹ்லா ஹபீப், அக்குறணை (இலங்கை)

# நாகரீகத்தின் நடுவில்

அலைபேசியின் அவதாரத்தில்
உறவுகள் தொடர்பு எல்லைக்கு
அப்பால்

இணையத்தின் ஆரவாரத்தில்
புத்தகங்கள் எல்லாம் ஊமையாய்


அவசரமான உலகில் மனிதாபிமானம்
அடுக்குமாடி குடியிருப்பில்
அநாதையாய்

அடுத்த வீட்டின் முகங்கள்
தெரியாத உள்ளங்கள் ஊனமாய்

புன்னகை என்பது இன்று பற்பசை
விளம்பரத்தில் மட்டுமே அழகியலாய்

அலைபேசியின் அசைவில் குடும்பங்கள்
விரல்களின் வேதனைகளாய்

நாகரீகத்தின் நடுவில் மனிதம் தொலைந்து
அனைத்தும் நட்டங்களாய்



கவிஞர் ஸ்ரீ. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# சுகமே



வெற்றிடத்தை
சுற்றி சுவர் எழுப்பினேன்
விரிந்தது வீடு.

மூடிய ஜன்னலுக்குள்
பூமியை சுருங்குகிறது
ஆகாய விமானம்.

தன் கிளையை
வெட்டுபவனையும்
தாங்கிப் பிடிக்கிறது
மரம்.

துரத்தும் மழையிடம்
ஜெயிப்பதைக் காட்டிலும்
தோற்றுப்போய் நனைவது
சுகமே.

கவிஞர் கோ. தினுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# எழுச்சியும் வீழ்ச்சியும்



எழுச்சியும் வீழ்ச்சியும்
மனித நாகரிகத்தை
அளவிடும் அழகிய
அளவீட்டுக் கருவிகள்

அவனியின் அழகும்
மனிதத்துவத்தின் இருப்பும் அலைமோதும்
காலக்கேட்டின் முடிவுகளின் சுழற்சியில்
வரலாறு கதை பேசும்

யுகங்களால் மாற்றமடையாத எதுவும்
இப்பூமியில் இல்லை.
அறிவோடு புரட்சி செய்யும் நாகரிகம்
நூற்றாண்டு நடை பழகும்

வெற்றியும் தோல்வியும் ஏற்புடைமை பேசும்
ஊமையானி உண்மைகள்
ஒருநாளில் வெளிச்சம் தருவதே
யதார்த்தங்களின் வெளிப்பாடு


மேலைத்தேயம் கீழைத்தேசம்
மனிதக் கணக்கீட்டின்
முடியாத முகவரிகள்
மானிடம் செழித்திட
மனிதாபிமானமே மைல்கற்கள்

எழுச்சியும் வீழ்ச்சியும்
மனிதப் பண்பாட்டு
மாற்றங்களின் மறையாத
அடையாளங்கள்

புதைக்கப்பட்ட உண்மைகளும்
வெளிப்பட்ட குரோதங்களுக்கும்
கயமைகளுக்கும்
காலமே பதில் கூறும்
என்பதே சத்தியம் சாத்தியம்

கவிஞர் சேஹு மொஹம்மது பெனாஸிரா, முஸ்லிம் ஹல்மில்லாவ

உச்சி வெயில்
தலையில் கொண்டேன்
உச்ச வெளிச்சம்
கண்ணில் கண்டேன்



கவிஞர் ஆதன் ஆரா, அருப்புக்கோட்டை

தைமகளே வருக !மாற்றங்களைத் தருக!
எத்திக்கும் தித்திக்கும் திக்கெங்கும் திகட்டிடுமே
ஏற்றம் பெறவே உழைப்பைப் புகட்டிடுமே
மனமாசுகளை தீயிட்டு இன்றே கொளுத்துக
தினம் தோன்றிடும் உள்ளம் வெளுத்தே
நாளும் உதிக்கும் உனக்காய் கிழக்கே
தொடுக்க வேண்டாம் எவர்மீதும் வீண்வழக்கே
தன்குற்றம் நீக்கி சுற்றமே ஆக்குக
மாற்றாரின் இன்னலை உடனே போக்குக
தித்திக்கும் பொங்கலே திருப்பங்களைத் தந்திடு



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்

# புத்தக விரும்பி

தேடல்கள் நிறைந்த என் வாழ்வின் பக்கங்கள்
தஞ்சமாகிக் கொண்டதில்
விருப்பமாகிப் போனதே புத்தகங்கள் என்பேன்
வாழ்க்கை வெறுத்துப் போனதாய்
வாட்டம் கொள்கையில்
மௌன மொழியில் கதை கூறுகின்றன
புத்தக அடுக்குகள்

வாழ்வின் சுவாரஸ்யங்களைத் தேடுகையில்
அழையா விருந்தாளியாய் அணைத்துக் கொண்டது
நான் கரம் தொட்ட நூல்
நான் தொலைத்த பட்டாம்பூச்சி எழுதியதோ என
வியக்கும் அளவு உறங்கிக் கிடக்கின்றது
நூலின் பக்கங்களுக்கிடையில்
ஓர் காதல் கதை

கதையின் முடிவில் சிந்திய கண்ணீரைத் துடைக்கும்
கைக்குட்டையாய் எட்டிப் பார்க்கின்றது
மற்றொரு நூல்
இயலாமையின் முனையில்
நம்பிக்கை இழந்தவைகளோ
இன்னொருவரின் சாதனையாய் வெளிவருகின்றன
நூல்கள் சிலதில்

படித்துத் தீர்த்த நூலில் மீண்டும் மீட்டுமளவு
எழுதப்பட்டிருக்கிறன சில தத்துவங்கள்
எழுதப்படாத என் கவிதைகளையும்
எழுத்துருவில் வாசித்துக் கொள்கின்றேன்
அவ்வப்போது பல இடங்களில்

நிழலாய் நிற்கும் கனவுகளையும் நிறைந்த ஆசைகளையும்
மனதளவிலே நிஜமாக்கின்றன புத்தகங்கள்
ரணங்கள் தராத ரம்மியமான உலகை
அழகாய்க் கற்பிக்கும் ஆசானாய் என்னுடன் நூல்கள்
நானோ புத்தக விரும்பியாய்



கவிஞர் அதீபா ஹஸன், காத்தான்குடி

# ஞாபகத் தென்றல்

நிபந்தனை விதித்துவிட்டாய்
ஏனென்று தெரியாமலே
நானும் விழிக்குள் கரைகிறேன்

தெருமுனை திக்கில்
என் பார்வைத் தேடலில்
உன் வாசம்தான் எனை
வந்தடைந்தது

இல்லையில்லை
நான் உணர்ந்தானோ என்னவோ
சிறிதொரு கணம் மூச்சை மறந்தேன்

ஏன் மறந்தேன்
தொடுத்த கவிதை வரிகளை
உன் முன் உரக்கச் சொல்லிட
மனம் விரைந்தது

நொடித்த உன் நடையில்
சில்லாக உடைந்தாலும்
விடாது வாசித்தேன் கவிதையை
என் மனதை காட்டிலும்
இந்த வரிகளை உணர்ந்தாய்
புரிந்தது

கடந்த போன வாலிபத்
தென்றலொன்று இசைத் சென்றது
என் கவிதையை
அவசரமாக ஏன் பகிரந்தாய்
இக்கவிதையை என்ற
உன் கேள்விக்கு பதில் உன் விழியில்



நீ விளையாட திடலாக நானிருக்க
மனமில்லை
உணராத உன் உள்ளத்தில்
புகுந்து செல்ல நான்
காற்றுமில்லை
இப்பிடியே இருப்பேன்
காதல் அதுதான் உன் அகராதியில்
என்னடி பெண்ணே

மாசற்ற காற்றைப் போல்
காதலை தேடுவதும் அபத்தம்தான்
ஆனால் சில பொழுதேனும்
உண்மையாகவே நான் சில
நேரங்கள் அற்புதத்தில் கரைந்தேன்
பொழுதுகள் கலைவது போல்
சிலிர்த்த நொடிகள்

கவிஞர் சுந்தரிபாஸ்கரன், திருப்பூண்டி, நாகப்பட்டிணம்

ஏழு ஏழு ஜென்மமெடுத்தாலும்
எனக்கிந்த வாழ்க்கையிலே
எழிலாக கிடைத்த செல்வங்களே
என் வீட்டு பிள்ளைக்கனிகளே

என்னோடு சண்டையிட்டு
எனக்காக அழுதிடுவரே
எகத்தாளமாக அடித்துக்கொண்டு
என்னவென்று நின்று பேசுவரே

எடு கோளை என்றால்
எதிரில் நிற்காமல் ஓடிடுவர்
எதையும் புரிந்துகொள்ளாமலே
எதிர்கேள்வி அடுக்கிடுவர்

எனக்கென பங்குவைத்து
எட்டியெடுத்து நகைத்திடுவர்
எவரிடமும் விட்டுக்கொடுக்காத
எதிலுமே விலகிடாத

என்னில் உதித்த முத்துக்களே
எதார்த்தத்தாமாக பேசிட்டு
எனை கேளி செய்தே
எனக்கு குருவாக ஆகிடுவரே

எந்தன் தாய்மையன்பிற்கும்
எத்தனை போட்டி வந்தாலும்
என்னருமை வாரிசுகளுக்காக
ஏழுமலை ஏழுகடல் எட்டி சென்று

எது நியாயமாக கேட்பினும்
எப்படியேனும் பெற்றுதருவேன்
எவர் எதிர்த்து நின்றாலும்
எட்டித்தள்ளி வாக்கை காப்பாற்றுவேன்!



கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

# சித்திரைக்கு வந்தவளே



சித்திரைக்கு வந்தவளே
சேதிசொல்ல மாட்டாயா
சுத்திச்சுத்தி வந்தவனுக்கு
சொர்க்கம் காட்டாயா

சீவிச் சிங்காரிச்சு
சிந்தையக் கவர்ந்தவளே
மேவித்தான் தேகமெல்லாம்
ஊறுறடி கட்டொறும்பா

நேசமான காதல
நெஞ்சமெல்லாம் நெறச்சிப்புட்டேன்
பாசமான பைங்கிளியே
பஞ்சாங்கம் பாக்கட்டுமா

ஒன்னால ஒலகமறந்து
ஓடித்தான் வாறனடி
என்னோட நீயிருந்தா
வாழ்க்கையெல்லாம் இனிக்குமடி

காதலச் சொல்லுபுள்ள
கண்ணாலம் வைச்சுக்கலாம்
மோதல் இல்லாத
மோகத்தில் கலந்திடலாம்

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி இலங்கை




## நாச்சியார் பதின்மூன்றாம் திருமொழி.
## "கண்ணனென்னும் " 6 முதல் 10 முடிய. 005

நந்தகோபர் மகனென்று பிரசித்தன்! இரக்கமிலான்!
சுயநலத்தன்! ஸ்ரீயப்பதி! என்றன்னை அபலையாய்
ஆக்கியவன்! துன்புறுத்தலால் என்றனையே ஆற்றலிளாய்
செய்தோனே! அன்னவனின் பாததூளி என்னுடலில்
பூசிடுங்கள் என்றவேண்டல் கோதைதன் ஆறாவது
பாசுரத்தே வைத்தனளே! யசோதைதாய் தன்மகனாம்
சேயான கண்ணனையே பயனிலனாய் வேம்பெனவே
வளர்த்துள்ளாள்! என்கொங்க் அன்னவனின் தோள்கட்கே!
என்பதனால் நன்கிறுக்கி அணைத்திட்டே கட்டிடுங்கள்!
எனக்கோதை ஏழாவது பாசுரத்தே வேண்டுவளே!
உளமுருகி நைந்தகோதை தானிருத்தல் இல்லாமை
பற்றியவன் எண்ணாத காரணத்தால் என்னுடைமை
களவாடிய கண்ணனவன் கட்படினே தன்கொங்கை
பறித்தெடுத்து அவன்மார்பில் எடுத்தெறிந்து என்துக்கம்
தீர்வனென எட்டாவது பாசுரத்தே கழறிடுவாள்!
கோதைதன் கிளர்ந்திட்ட பருமனுடை கனமுலைகள்
துன்பம்தீர் அந்தரங்க கைங்கர்யம் செய்யாதே
வேற்றுதவம் எற்றுக்கே?அன்னவனின் திருமார்பம்
அன்பரவர் அணைத்தற்கே என்பதனால் எனைச்சேரில்
நலம்பயக்கும்! காட்சிதந்தே "நீ வேண்டாம் " என்றாலும்
நனிநன்றே! என்றுரைத்தாள் ஒன்பதாவது பாசுரத்தே!
பத்தாவது பாசுரத்தை கற்றவர்கள் தன்போலே
துன்புறாது இன்பமதே உற்றிடுவர் என்றபயன்
சாற்றிடுவள் கோதையளே! பதின்மூன்றாம் திருமொழிதான்
முற்றிற்று! பதிநான்காம் திருமொழியின் பத்துபாசுரம்
தொடர்ந்திடுமே! இவையாவும் முற்றிற்று என்றாலே
நாச்சியார்தம் திருமொழியது தீர்ந்திடுமே! கோதைதமிழ்
பாவதுவும் ஈரேழு திருமொழியும் முற்றமையும்!
தொண்டரடி பாணரென இருவர்தாம் தொடர்ந்திடிலோ
ஆழ்வார்கள் பன்னிருவர் தீந்தமிழ்ப்பா சுவைமுற்றும்!

கவிஞர் கணக்காயன் (இ. சே. இராமன்)

# காலம் மாற கவலைகள் தீரும்

கொண்டுவந்த இளநீர்க் குலைகளெலாம்
இன்னும் விற்கவில்லை எனும் கவலை
ஏன் கொண்டீர்? பனிக்காலம், மழைக்காலம்
என்பதனால் வியாபாரம் மந்தநிலை! வருகைதரும்
கோடையிலே பெருகிடுமே விற்பனையும்! பருகிடுவோர்
குளிர்ந்து மகிழ்ந்திடுவர்! காலம்மாற கவலைதீரும்!
வெட்டி வைத்த குலைமீது கண்வளரும்
குட்டிப் பேரனவன், பின்னாளில் பெற்றோரைக்
கட்டிக் காப்பானோ எனும் கவலையில்
முட்டிமேல் கைவைத்து முகத்தைச் சாய்த்தீரோ?
தள்ளிய குலையால் தள்ளாத வயதிலும்
தருகிறதே வருமானம்! வளர்த்த தென்னை
உயர்த்திடும் உன்னை! தென்னைபோல் பேரனும்
ஐயமின்றிக் காப்பானென உரைக்கிறதோ இப்படமும்!



கவிஞர் ஞ. சீ. சேஷாத்ரி, புதுச்சேரி

# திசைகள்

வடக்கிலே திரும்பிட
வாஞ்சையுடனே கண்டிட்டாய்!

தெற்கே திரும்பிட
தென்றலாய் வருடிட்டாய்!

கிழக்கே நோக்கிட
கிளிஞ்சல்களாய் சிரித்திட்டாய்!

மேற்கே பார்த்திட
மேகமாய் விரைந்திட்டாய்!

பெண்ணே காணும் இடமெல்லாம்
கண்ணுக்கு விருந்தளித்தே செல்கிறாய்
இயற்கை உடன் ஒன்றியே!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

கடந்த வருட
சாமி பட நாட்காட்டி
தாள்களை இழந்த போதும்.
இந்த வருடம்
பூஜை அறைக்குள் புகுந்து விட்டது!
இனியென்ன..
சூடம் சாம்பிராணி ஊதுபத்தியுமாய்..
ஏனைய சாமி படங்களுடன்
ஒரு படமாய் சேர்ந்துவிட்டது!
##
"தேநீர்"
குடிக்கும் போதெல்லாம்
ஞாபகத்துக்கு வந்து விடுகிறார்கள் !
"தேனீர்" என்று
பிழையாக எழுதுகின்றவர்கள்!
###
விலையைக் கூட்டி
விலையைக் குறைத்து
விற்பனை செய்யும்
செயல் அல்ல
என் காதல் !
என்றும் நிலையான
விலை போன்றது தான்
என் காதல்!
இங்கே பேரம்
பேசுவதற்கு நேரமேது?



கவிஞர் சோ. ஸ்ரீதரன், இலங்கை

தன்தரப்பு நியாயத்தை
தெளிவாய் புரிய வைக்கும்
எண்ணமே இல்லாமால்
பேச்சின் ஆரம்பத்திலேயே
முடிவாய் என்ன சொல்கிறாய்

நீட்டி முழக்கி உதாரணம் சொல்லி
அதிகம் பேசி விளக்கிவிட்டு
அதிகமாய் பேசவிரும்பவில்லை

வசதிகளும் வாய்ப்புகளும்
அதிகம் இருக்கையில்
உதவி கேட்கப்படுகையில்
உங்களுக்கு இல்லாமாலா
ஆனால் தற்போது
இயலவில்லை
என இனிப்பு தடவிய
வார்த்தைகளில்

தானே கஷ்டத்தில் இருக்கையில்
உதவி கேட்பவர்
கஷ்டம் தன்னிலும்
அதிகம் இருப்பதால்
கேட்காமலேயே முன் நின்று
என்னால் முடிந்தது
வைத்துகொள்

<u>இதுவும்தான்...</u>

தன்பெயர் உள்ளவரை
மற்றொருவர் அழைக்க
'திரும்பி பார்ப்பதும்'

நேரம் அறிவிக்கும்போது
'கைக்கடிகாரம் பார்ப்பதும்'



கால் தடுக்கும்போது
'அப்பா என அலறுவதும் மட்டுமல்ல...

தனியனாய் செயலாற்றும் போதும்
யோசிக்கும் போதும்

'இப்படி நடந்து இருக்கக்கூடாது
என்றோ

'நான் சொன்னது சரிதானே'
என்று புத்தி சொன்னதை
உதட்டு வார்த்தையால் முணுமுணுப்பதும்
'அனிச்சை' தான்...

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை

நெருப்பினில் இதயம்
அணைப்போடு
கொளுத்துகிறது நினைவு
*

அலையாய்த் தொடர்வேன்
கரையாய் நிற்கிறாய்
அலைந்ததில் தொலைந்தேன்
*

நேர மாற்றங்கள்
நெஞ்சுக்குத் தெரிவதில்லை
நினைவுகள் சூழ்ந்ததில்
*

உன் நினைவுச் சூழலில்
கவிதை மேகங்கள்
மனம் நனையும்
*

சிறகுகளில் பறக்கிறோம்
உனை நோக்கி நானும்
எனை நோக்கி நீயும்
*

இருள் எங்கே
ஒளியாய்
உன் நினைவிருக்கையில்
*

உன் அகத்தையே
அழகெனப் பிரதிபலிக்கும்
மனக்கண்ணாடி நான்
*

மழையில் நனைகிறேன்
துடிக்கும் இதயம்
சட்டையில் அவள் மடல்
*

கனவு நட்சத்திரங்கள்
கலைகின்றன
உதிக்கும் நினைவுச் சூரியன் நீ



மனக்கடலில்
உயிர்த்திரவமாய்
நகரும் தீவு நீ
*

விலையாய் உயிர்
(க)வலையில் விழுகிறேன்
ஏந்தாத நீ
*

சந்திப்புகளில் போட்டி
யார் எவ்விடத்தில் இடுவது
முதல் முத்தம்

கவிஞர் இளையவன் சிவா

கோழி இறகை வைத்து
பறக்க வேண்டுமா
காது குடையுங்கள்
***

மையிற்கு பதில்
தேனை ஊற்றி எழுதினாலும்
சில வார்த்தை இனிக்காது
***

மனிதனின் உடல்
குரங்கு போல உள்ளது
மனம் குரங்காகவே உள்ளது
***

எகத்தாளம் கொண்டவரில்லை
ஏகத் தாளம் கொண்டவரிவர்
ஏ ஆர் ரஹ்மான்
***

அன்பால் வந்தமை
ஆண்பால்
மனநோய்
***

எனக்கு கோபம்
எதை ரசிப்பது ?
பூக்கள் மேல் பட்டாம்பூச்சி.
***

தூக்கம் வந்தால் தூங்கிவிடுங்கள்
பின் வரவில்லையெனில்
உலகமே வெறுத்துப்போய் விடும்
***

கவிதைக்கு உரியவர்
அதை படிப்பதில்லை என்பதே
காதல் கவிதையில்
மிக பெரிய நெருடல்
***



உன் குரல்
அவர் போல் உள்ளது
இவர் போல் உள்ளது என்றாள்
பேசுவதற்கு காரணம் போல
பேசினால் சரி :)
***

வாழ்க்கைக்காக கேட்டேன்
இல்லை என்றாய்
வார்த்தைக்காக கேட்டேன்
வந்து விழுகிறாய் கவிதையாய்

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன்

# வான் புகழ் தந்த வள்ளுவன்

தமிழ்மறை போற்றப்படும் திருக்குறளை தமிழருக்கு என்றும் நிலைத்து நிற்கும்படி வாழ பெரும் புகழை தேடித்தந்த காவியத்தலைவன்.

வைகாசிலே அவதரித்தாலும் தன்னகர் இல்லா தலைவனை ஒரு விழா எடுத்து மகிழ்கிறோம் தைத்திங்களில் உழவர் திருநாளில்.

133 அதிகாரம் என்ற நூல் கயிற்றில் கட்டி 1300 குறள் என்னும் முத்துக்களை கோர்த்து திருவள்ளுவ மாலையாக தந்தவன் நம் வள்ளுவப் பெருந்தகை. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற வகைகளை தந்து, அறத்துப்பாலில் மக்கள் அறவழியில் நடக்கவும் உயிர் களிடத்தில் அன்பாக நடக்கவும், ஈட்டிய பொருளை ஏழைகளுக்கு பகிர்ந்திடவும் இன்பத்துப்பாலில் ஈட்டிய பொருள் மூலம் இன்பம் நுகர்ந்திடவும் பாடியவர்.

மதுரை சங்கத்தமிழ் மன்றத்தில் சிறப்பு தமிழ் பணி செய்து பலரின் பாராட்டையும் பெற்றவர்,
மனிதன் என்ற உன்னத நிலையை தக்க உறுதிப்பொருளை அடைய தம்முடைய நூலில் முறையாக வகுத்துக் கூறியிருக்கிறார்.1 வான் புகழ் வள்ளுவனை உலகிற்கு தந்து பெருமை அடைந்தது தமிழ்நாடு.
நிலையான அரசியல், பொருளியல், சமூகவியல், உளவியல் போன்ற உண்மைகளை கொண்டு விளங்குகிறது.

இன்பத்துப்பாலில் காதலர் உள்ளம் அன்பினால் இணைந்து மக்கள் முழுமை அடைவதை காட்டுகிறது. சூரிய, சந்திரர் உள்ளவரை இவன் புகழ் என்றைக்கும் நிலைத்து நிற்குமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

## அத்தியாயம் -10 நதியின்மேல்இரயில்

பழனி விழித்துப் பார்த்த போது சுற்றுமுற்றும் இருளாக இருக்க மங்கலாக வெளிச்சம் தெரிந்தது. இரயில் கர்ஜத் இரயில் நிலையம் தாண்டி குகைக்குள் ஓடிக் கொண்டிருந்தது.

எழுந்தவன் வேக வேகமாகப் போய் முகம் கழுவி துடைத்துக் கொண்டு முதல் வகுப்பு ஏ.சி. கம்பார்ட்மெண்ட் பாத்ரூம் அருகில் வந்து நின்றான்.

வெளியே கதவு வழியாக எட்டிப் பார்க்க, தூரத்தில் ஒரு நதியின் மேல் இரயில்பாலம் தெரிந்தது. இப்போது மந்திரி இந்தப் பக்கம் வந்தால் அவரைப் பிடித்து கீழே தள்ளினால் சரியாக அந்த நதியில் விழுவான். கண்டிப்பாக ஆள் காலி என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது பாத்ரூமிற்கு வந்த மந்திரி வலம்புரி மாதவனை நேருக்கு நேராக சந்தித்தான்.

''என்ன அண்ணா அப்படிப் பார்க்கிறாய் .இது மந்திரி வலம்புரி மாதவன் தந்த கட்சிக்கரை போட்ட சேலை. அடுத்த மாதம் நடக்க விருக்கும் ஈரோடு மாநாட்டில் கட்சியின் மகளிரணித் தலைவியாக என்னை அறிவிக்கப் போகிறார். இதோ பார், அவர் கொடுத்த பூச்செண்டு. இது அவர் கொடுத்த செண்ட் பாட்டில். எவ்வளவு அழகான மனிதர். அவர் உடையில் தெரியும் மிடுக்கே மிகவும் பிரமாதமாக இருக்கும்.''

''பாரேன் இன்னும் கொஞ்ச நாளில் உன் தங்கை மிகப் பெரியாளகப் போகிறாள். தினமும் அவளைப் பற்றிய செய்திகள் பக்கத்திற்கு பக்கம் பத்திரிகைகளில் வரும்.'' என்று ஆவலாகச் சொன்னாள் கவுசல்யா.

''கவுசல்யா இந்த அரசியல் வாதிகளை எப்போதும் நம்பக்கூடாது. எப்போது வேண்டுமானாலும் என்ன வேண்டுமானாலும் செய்யக் கூடியவர்கள்.''

''நீ திருமணமாகி இன்னொரு வீட்டிற்குப் போக வேண்டியவள். அதை மறந்து விடாதே.''

''போங்கண்ணா, உங்களுக்கு எப்போதும் சந்தேகம்தான். வலம்புரி மாதவன் எவ்வளவு கண்ணியமான மனிதர். ஒரு முறை தெரியாமல் அவர் கைபட்டு விட்டதற்காக பத்து முறை மன்னிப்பு கேட்டார் தெரியுமா?''

''பெண்களைப் பற்றி எவ்வளவு உயர்வாகப் பேசுகிறார். பெண்ணுரிமையை எவ்வளவு அழகாக முழங்குகிறார்!. அவர் பேசுவதை இன்று முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம் என்றாள் கவுசல்யா மகிழ்ச்சியோடு.''

''என் அன்புத் தங்கையே, எனக்கு நீ அரசியலில்...... அதுவும் பொதுவாழ்க்கைக்கு வருவது எந்த விருப்பமும் கிடையாது. அம்மா எத்தனை முறை மறுத்த பிறகும் நான் உன்னை பொது நிகழ்ச்சிக்கு அனுப்பியக் காரணம் உனக்குள்ளே இருந்த உத்வேகமும், ஆசையும் பேச்சுத் திறமையுந்தான்.''

ஆனால் அவை ஒரு எல்லை வரை தான் செயல்பட வேண்டும். சிலர் உன்னைப் பற்றி தவறாக பேசி அடியும் வாங்கிவிட்டார்கள். எல்லோரையும் அடிக்கமுடியுமா? அல்லது ஊரார் வாயைத் தான்மூட முடியுமா? நீ இதை உணர்ந்து கவனமாக நடக்கவேண்டும்.'' என்றான் பழனி.

''அண்ணா, இந்த கவுசல்யா பழனியின் தங்கை. என்னை யாராவது தீண்ட நினைத்தால் எரித்துவிடுவேன். பொது வாழ்க்கை என்று வந்து விட்டால் பலரும் பல விதமாகத்தான் பேசுவார்கள். அதற்காக நம்முடைய முன்னேற்றங்களை நாம் தடைசெய்து கொள்ள வேண்டுமா என்ன?'' என்று சீறினாள் கவுசல்யா.

''எனக்கு உன்னைப் பற்றி நன்றாகத்தெரியும் கவுசல்யா. அதனால் தான் நான் உன்னை இந்த அளவிற்கு பொதுக் கூட்டங்களுக்கு அனுமதித்ததோடு நானும் சலனமில்லாமலிருக்கிறேன். ஆனால் நீ பெண், அதை மனதில் வைத்துக் கொண்டு நடக்கவேண்டும். நான் சொல்லி உனக்குத் தெரிவதில்லை. சேலை முள்ளின் மேல் விழுந்தாலும் முள் சேலை மேல் விழுந்தாலும் சேதம் சேலைக்குத் தான் என்பதை மறந்துவிடாதே.''

''அய்யோ, அண்ணா உனக்கு என்னாயிற்று இன்றைக்க.....ரொம்பவே அறிவுரை கொடுக்க ஆரம்பித்து விட்டாய். உனக்கு ஸ்வீட் தருகிறேன். இதுகூட மந்திரி வலம்புரி மாதவன் தான் வாங்கிக் கொடுத்தார். மும்பை ஸ்வீட்ஸ்.'' என்று ஒரு மிட்டாய் எடுத்து பழனிக்கு ஊட்டி விட்டாள்.

பழனிக்கு புரையேறி விட, அவன் தலையில் தட்டிய கவுசல்யா ஓடிப் போய் உள்ளேயிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

தண்ணீர் குடித்து விட்டு "கவுசல்யா உன்னுடைய பொதுநிகழ்ச்சிகள் போதும் என்று தான் என் அடி மனது சொல்கிறது. இனி நீ கண்டிப்பாக மாநாட்டுக் கெல்லாம் செல்ல வேண்டுமா?" என்று கேட்டான்.

"போ! இப்படித்தான் திடீரென்று ஏதாவது குண்டைத் தூக்கிப் போட்டு விடுகிறாய். எனக்கு கட்சியில் மாநில மகளிரணி தலைவி பதவி கிடைக்கிறதென்றால் எவ்வளவு பெரிய விசயம்."

"நாளைக்கு தமிழகம் முழுவதும் என் பெயர் பிரபலமாகும் போது அதில் உனக்கும் தான் பங்கு உண்டல்லவா? என் அன்பு அண்ணனல்லவா.....என்னைக் கண்டிப்பாக அனுப்பி வையுங்கள். நான் தனியாகவா போகிறேன். நமதூரில் இருந்து நிறைய பெண்கள் ஈரோடு கட்சி மாநாட்டிற்கு வருகிறார்கள். அவர்களோடு போய் விட்டு வருகிறேன்." என்று சொன்ன கவுசல்யாவை கடைசி முறையாக உயிரோடு பார்த்தது அன்றுதான்.

"வாப்பா, உன்னைத் தான் தேடிக் கொண்டிருந்தேன். என்ன விசயமாக என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறாய்." என்று மந்திரி மாதவன் கேட்க, யாரும் எதிர்பாராத போது மந்திரியின் மேல் பாய்ந்தான் பழனி.



தொடரும்...

கவிஞர் இராஜகைநிலவன்

## வாசிப்பு அனுபவம்

## மூவரிக் கவிதைகள்

"கவிமாமணி" இரஜகை நிலவன்

''வேள்வி' மூவரிக் கவிதைகள்'' நூலைத் தேடிய அன்பு வாசகருக்கு, கனவுகளைத் தேடிய நேசத்திற்கு, முதலில் மகிழ்ச்சிகளும் வாழ்த்துக்களும்...




தமிழ் இலக்கிய வரலாற்றிலே புதுக்கவிதைகள் தனக்கென தனியிடம் பிடித்துள்ளன புதுக்கவிதை முன்னோடிகள் பலர் பல கவிதைகளை நமக்கு அளித்துள்ளனர் அவர்கள் வழி நாமும் கவிதைகள் படைப்போம் புதுக்கவிதைகள் எளிய மொழி நடையிலுள்ளதால் அனைவராலும் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவிருக்கும். நவீன தமிழ் இலக்கியத்தின் சிறப்புக்குச் சான்றாக புதுக்கவிதைகள் விளங்குகின்றன. புதுக்கவிதை வழிப் பல கவிதை முன்னோடிகள் வளர்ச்சி அடைந்தனர். சுருக்கம் கொண்டதனால் எழுதுவது இலகுவாகும். பேச்சுவழக்குச் சொற்கள், ஒலிநயம் காணப்படுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும். வடமொழி, ஆங்கிலம், பேச்சு வழக்கு சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. ஒரு கருப்பொருளைக் காட்சியாகக் கொண்டு நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தக் கூடியதாய் புதுக்கவிதைகள் சிறப்பு பெறுகின்றன.

கவிதைகளை வாசித்து விட்டு விமரிசனம் கூறுங்கள். குட்டுங்கள்...திட்டுங்கள்... முதுகில் தட்டுங்கள்... கிரீடம் சூட்டுங்கள்.

ஆம்.. ஆனால் கண்டிப்பாக விமரிசனம் தாருங்கள்.

கவிஞர் திருமதி ஆர். பி. வசந்த நிலா

### சிறிதினும் பெரிதாக

2-ஆண்டுகளே படிப்பு, 29-ஆண்டுகளே வாழ்வு, 6-ஆண்டுகளே கலையுலக வாழ்வு, 57-படங்கள், 262 - பாடல்கள். சிறிய ஆண்டுகளில் பெரிதாய் வாழ்ந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

### குருவாக



விவசாய சங்கம், பொதுவுடைமைக் கட்சியில் ஈடுபாடு கொண்டிருந்தார்.1952-ல் பாண்டிச்சேரி சென்று பாவேந்தர் பாரதிதாசனிடம் தமிழ் பயின்றார். பின்னர் அவர் நடத்திய 'குயில்' இதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். தனக்கு தமிழ் கற்பித்த குரு பாரதிதாசன் வாழ்க என்று எழுதிவிட்டு தான் கடிதம் எழுதத் தொடங்குவாராம்.

வேளாண் தந்த பட்டறிவு, பாரதிதாசன் தந்த மொழியறிவு, கம்யூனிசம் தந்த கருத்தறிவு இவைகளே இவர் பாட்டின் குருவாக அமைந்தது

### புரட்சிக் கவிஞனாக

1954 ஆண்டில் பாமரர்களின் கவிஞனாய் பாட்டெழுத வந்தவன். காதலின் களியாட்டம் அல்லது பக்தியின் கொண்டாட்டம் என்று இருந்த பாடல்களின் இடையே, புரட்சி, பொதுவுடைமை, முற்போக்கு, பகுத்தறிவு, போன்றவற்றினை புகுத்தி பாடல்களின் தடத்தையே மாற்றிகாட்டியவர் பட்டுக்கோட்டையார்.

புரட்சிக் கவிஞனாக

1959 வரை எம்ஜிஆர் நடித்த 7 திரைப்படங்கள், சிவாஜி கணேசனின் 11 திரைப்படங்கள் உட்பட பல திரைப்படங்களுக்கு பாடல்கள் எழுதினார்.

என் முதல்வர் நாற்காலியில் மூன்றுகால்கள் எதுவென்று எனக்கு தெரியாது ஆனால் நான்காவது கால் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்தான் - எம்.ஜீ.ஆர்

முதலாக

"நல்லதை சொல்பவன் நாத்திகனா? - உலகில்
இல்லாததை சொல்லி ஏமாற்றுவதுதான் முறையா?" -
தமது 8 வயதில் இந்த பாடலை தமது சகோதரர் கணகபதி சுந்தரத்திடம் பாடிகாட்டியுள்ளார். மீதி வரி சகோதரருக்கு நினைவில் இல்லை,

"ஓடிப்போ ஓடிப்போ கெண்டைகுஞ்சே - கரை
ஓரத்தில் மேயாதே கெண்டை குஞ்சே
தூண்டில்காரன் வரும் நேரமாச்சு - ரொம்ப
துள்ளிகுதிக்காதே கெண்டை குஞ்சே - இதுதான் பட்டுக்கோட்டையாரின் முதல்கவிதை இதை எழுதும்போது அவரின் வயது 14.

"காப்பி ஒன்னு எட்டணா கார்டுசைசு பத்தணா
காண வெகுஜோராயிருக்கும் காமிராவை தட்டினா"

(படம் :படித்தபெண்) 1954இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தபடம் வெளிவருவதற்குமுன் "மகேஸ்வரி" என்ற படம் வெளிவந்தது. ஆனால் அவர் எழுதிய முதல் பாட்டு இதுவே.


திரு அ. வில்சன், இதழாசிரியர்

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

## கட்டுரை

"புதிய ஒளிவீசுத்துப்பார் இமையம்தாண்டிப்
புன்சிரிப்புக் காட்டுதுபார் இன்பம் அங்கே"

07.11.1954 அன்று ஜனசக்தி நவம்பர் புரட்சிமலரில் வெளிவந்த இந்த பட்டுக்கோட்டையாரின் கவிதைதான் அச்சில் வெளிவந்த முதல் கவிதை.

### பொதுவுடைமை இயக்கத்தின் புயலாக

ஒரு கவிஞனுக்குள் பொதுவுடைமை இயக்கம் என்ற புயல்நுழைந்தால் அவன் எப்படியெல்லாம் பரிணாமப்படுவான் என்பதற்கு பட்டுக்கோட்டையார் பாடல்கள் எடுத்துக்காட்டு

- உழைப்பின் மேன்மை பாடல்- "காடு வெளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும் காலும்தானே மிச்சம்".
- மூடநம்பிக்கைக்கு எதிராக பாடல்-"வேப்பமர உச்சியில் நின்னு பேயோன்னு ஆடுதுன்னு விளையாடப் போகும்போது சொல்லி வைப்பாங்க - உன் வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க.
- மேடுபள்ளமற்ற சமுதாயம் உருவாக செதுக்கப்பட்ட பாடல் -"வளர்ந்துவரும் உலகத்துக்கே நீ வலதுகையடா - தனி உடைமைக் கொடுமைகள் தீர தொண்டுசெய்யடா-தானாய் எல்லாம் மாறும் என்பது பழைய பொய்யடா"

- இன்றைய சமுதாயத்திற்கு பொருந்தும் பாடல்- "திருடராய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்கமுடியாது"

- சமுதாயத்தின் அவலத்தினை செவியில் ஓங்கி அறைந்தபாடல்-"குறுக்கு வழியில் வாழ்வுதேடிடும் குருட்டு உலகமடா இதுகொள்ளையடிப்பதில் வல்லமைகாட்டும் திருட்டு உலகமடா தம்பி தெரிந்து நடந்து கொள்ளடா - இதயம் திருந்த மருந்து சொல்லடா".

திரு அ. வில்சன், இதழாசிரியர்

பொதுவுடைமை இயக்கத்தின் புயலாக

- தன்னம்பிக்கையை உயர்த்தி பிடிக்கும் பாடல்-"வறுமை நிலைக்கு பயந்துவிடாதே திறமை இருக்கு மறந்து விடாதே!'

இறுதியாக

சைனஸ் தொல்லைக்காக ஆபரேஷன் செய்தபோது, டாக்டர்கள் தவறான இடத்தில் ஆபரேஷன் செய்துவிட, அதன் பக்கவிளைவாக முகம் வீங்கி சிகிச்சைபலனின்றி, தமது 29 வயதில் 08.10.1959ல் பட்டுக்கோட்டையார் இயற்கை எய்தினார்.

"தானா எவனும் கெடமாட்டான்
தடுக்கி விடாம விழமாட்டான்
போனா எவனும் வரமாட்டான் - மேலே
போனா எவனும் வரமாட்டான் - இதப்
புரிஞ்சிகிட்டவன் அழமாட்டான்"

- இந்த பல்லவிதான் அவருடைய இறுதிப்பல்லவியாகும்

உருக்கமாக

"பட்டுக்கோட்டைசாய்ந்ததா? இல்லை பாட்டுக்கோட்டையே சாய்ந்ததம்மா!"- கண்ணதாசன்.
"கண்களை மூடுகிறேன்; கல்யாணம் தெரிகிறார் - ஒளிதெரிகிறது! கண்களைத் திறக்கிறேன்: கல்யாணம் இல்லை - கலையுலகு இருட்டாயிருக்கிறது"- கலைஞர் மு. கருணாநிதி

# நாளை நமதே

தினமும் ஓய்வில்லாமல்

உழைப்பதால்தான்

எல்லா இடத்திலும்

உயரத்தில் உள்ளது

கடிகாரம்

அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com